# KAMARAJ COLLEGE (Autonomous)

Accredited with A+ Grade by NAAC

(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)

**(19 Pages)** **Reg. No: ………………………………………**

**Question Code: 26E03616-T** **Course Code : 24USPA33**

**UG Degree - End Semester Examinations, April 2026**

**Third Semester**

**B.A. PUBLIC ADMINISTRATION**

**Socio-Political Movement of Tamilnadu**

**(For those who joined in July 2024 onwards)**

**Time : 3Hours** **Maximum : 75 Marks**

**பகுதி அ - (150 × 0.5 = 75 மதிப்பெண்கள்)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:**

CO:1 K:1 1. திருநெல்வேலிச் சரித்திரம் என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

(அ) இரேனியுஸ் ஐயர் (ஆ) எல்லிஸ் துரை

(இ) கால்டுவெல் (ஈ) சீகன் பால்கு ஐயர்

CO:1 K:1 2. தமிழ்ச் சமூகத்தில் மகளிர்க்குக் கற்பின் குறியீடாக அமையும் மலர் எது?

(அ) மல்லிகை (ஆ) ரோஜா

(இ) முல்லை (ஈ) அல்லி

CO:1 K:1 3. வரிசை Iல் உள்ளதை IIல் வரிசையுடன் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

A) குறிஞ்சி – 1) இந்திரன்

B) முல்லை – 2) முருகன்

C) மருதம் - 3) திருமால்

D) நெய்தல் - 4) வருணன்

(அ) 2, 3, 1, 4 (ஆ) 3, 2, 1, 4

(இ) 2, 1, 3, 4 (ஈ) 3, 1, 2, 4

CO:1 K:1 4. வரிசை I-ல் காணும் தொல்லியல் ஆய்வு இடங்களை வரிசை II-ல் உள்ள அவற்றின் மாவட்டங்களுடன் பொருத்துக.

A) கொடுமணல் - 1) தூத்துக்குடி

B) பொருந்தல் - 2) விழுப்புரம்

C) திருவக்கரை – 3) ஈரோடு

D) ஆதிச்சநல்லூர் - 4) திண்டுக்கல்

(அ) 1, 3, 2, 4 (ஆ) 3, 4, 2, 1

(இ) 3, 4, 1, 2 (ஈ) 1, 2, 4, 3

CO:1 K:1 5. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
இந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது. நம்பி ஆற்றங்கரையில் இரும்புக்கால கலாச்சாரத்தின் வேர்களை தேடுவதற்காக ஒரு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இது பழங்கால பொருட்களுக்கு பெயர் பெற்ற ஒரு செழிப்பான தொல்லியல் இடம் இவ்விடத்தின் பெயர்

(அ) துலுக்கர்பட்டி (ஆ) கீழடி

(இ) வெம்பக்கோட்டை (ஈ) பெரம்பலூர்

CO:1 K:1 6. சங்க காலத்தில் பெண்கள் தலை முடியில் அணிந்த ஆபரணம் எது?

(அ) தொய்யகம் (ஆ) புல்லகம்

(இ) வயந்தகம் (ஈ) வலம்புரி

CO:1 K:1 7. இந்திய மருந்து எனக் கிரேக்க மருத்துவர் ஹிப்போகிரேட்டஸ் கூறிய பொருள் எது?

(அ) மிளகு (ஆ) மஞ்சள்

(இ) வேம்பு (ஈ) பட்டை

CO:1 K:1 8. குடுமியான்மலை கல்வெட்டு ------------ பற்றி விளக்குகின்றது

(அ) இசை (ஆ) நாடகம்

(இ) கிராம ஆட்சி முறை (ஈ) நடனம்

CO:1 K:1 9. அத்திரப்பாக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கருவிகள் ------------ காலத்தை சார்ந்தவை

(அ) பழைய கற்காலம் (ஆ) புதிய கற்காலம்

(இ) இடை கற்காலம் (ஈ) பெருங் கற்காலம்

CO:1 K:1 10. அழகன்குளம் அகழ்வாராய்ச்சி இடம் ------------ மாவட்டத்தில் அமைந்துள்ளது.

(அ) இராமநாதபுரம் (ஆ) மதுரை

(இ) திருநெல்வேலி (ஈ) தஞ்சாவூர்

CO:1 K:1 11. தொல்பொருள் ஆராய்ச்சி இடங்களைப் பொருத்துக.

A) ஆதிச்சநல்லூர் - 1) சிவகங்கை

B) மாங்குளம் - 2) தூத்துக்குடி

C) கொடுமணல் - 3) மதுரை

D) கீழடி – 4) ஈரோடு

(அ) 2, 3, 4, 1 (ஆ) 3, 4, 2, 1

(இ) 4, 3, 1, 2 (ஈ) 2, 3, 1, 4

CO:1 12. ------ கல்வெட்டு சோழர்களின் கிராம நிர்வாக முறையை பற்றி குறிப்பிடுகிறது.

K:1 (அ) உத்திரமேரூர் கல்வெட்டு (ஆ) பட்டிபுரோலு கல்வெட்டு

(இ) மீனாட்சிபுரம் கல்வெட்டு (ஈ) திருவிசலூர் கல்வெட்டு

CO:1 K:1 13. தமிழகத்தில் எங்கு காலத்தால் முந்திய நுண்கற்கால நினைவுச் சின்னங்கள் கிடைத்தன?

(அ) செங்கல்பட்டு (ஆ) தஞ்சாவூர்

(இ) திருவண்ணாமலை (ஈ) தூத்துக்குடி

CO:1 K:1 14. 'அல்விளை பிரமாண இசைவு திட்டு' என்பது

(அ) ஏற்றுமதி வரி (ஆ) இறக்குமதி வரி

(இ) அடிமை வரி (ஈ) அடிமை விற்பனை விலை ஆவணம்

CO:1 K:1 15. ரோமானிய தொழிற்சாலை கண்டெடுக்கப்பட்ட இடம்

(அ) அரிக்கமேடு (ஆ) ஆதிச்சநல்லூர்

(இ) கீழடி (ஈ) பூம்புகார்

CO:1 K:1 16. சங்கம் என்ற சொல் எதைக் குறிக்கிறது?

(அ) பெரியவர்களின் அவை (ஆ) கலைஞர்களின் அவை

(இ) தமிழ்க் கவிஞர்களின் அவை (ஈ) தமிழ் அரசர்களின் அவை

CO:1 K:1 17. மதுரைக் காஞ்சி எந்த நில மக்களின் வாழ்வியலைக் கூறுகிறது?

(அ) குறிஞ்சி (ஆ) முல்லை

(இ) மருதம் (ஈ) நெய்தல்

CO:1 K:1 18. சங்கப்புலவர்கள் தங்கள் கவிதைகளை எங்கே வகைப்படுத்தினர்?

(அ) மதுரை (ஆ) திருச்சி

(இ) கரூர் (ஈ) பூம்புகார்பட்டினம்

CO:1 K:1 19. முசிறியை "இந்தியாவின் முதல் பேரங்காடி" என்று கூறும் வெளிநாட்டு நூல் ------------ ஆகும்.

(அ) இயற்கை வரலாறு (ஆ) புவியியல்

(இ) எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ் (ஈ) புத்த பதிப்புகள் (நாட்குறி புத்தகம்)

CO:1 K:1 20. சங்க காலம் என்பது ------------ உலோக காலத்தோடு தொடர்புடையது.

(அ) செம்பு (ஆ) இரும்பு

(இ) தங்கம் (ஈ) வெள்ளி

CO:1 K:1 21. பழமையான திராவிட மொழி ----------- ஆகும்.

(அ) மலையாளம் (ஆ) தெலுங்கு

(இ) தமிழ் (ஈ) இந்தி

CO:1 K:1 22. கரிகாலனுக்கு திருப்பு முனையாக இருந்த போர்

(அ) வெண்ணி (ஆ) மகதம்

(இ) அவந்தி (ஈ) வஜ்ரா

CO:1 K:1 23. i) இந்த இடம் தாமிரபரணி ஆற்றங் கரையில் அமைந்துள்ளது.
ii) தாழிகள் புதைக்கப்பட்ட களம் 114 ஏக்கர் பரப்பளவில் பரவி காணப்படுகிறது.
மேற்கூறிய கூற்றுகள் எந்த தொல்பொருள் தளத்தைப் பற்றி விவரிக்கிறது?

(அ) ஆதிச்சநல்லூர் (ஆ) அரிக்கமேடு

(இ) கீழவளவு (ஈ) கழுகுமலை

CO:1 K:1 24. அகழ்வாராய்ச்சி இடங்களை அதன் மாவட்டத்துடன் பொருத்துக. [அகழ்வாராய்ச்சி இடங்கள் - மாவட்டம்]

A) கீழடி – 1) தூத்துக்குடி

B) கொற்கை – 2) அரியலூர்

C) கங்கை கொண்ட சோழபுரம் - 3) தஞ்சாவூர்

D) குரும்பன்மேடு – 4) சிவகங்கை

(அ) 4, 3, 2, 1 (ஆ) 3, 2, 1, 4

(இ) 4, 1, 2, 3 (ஈ) 1, 4, 3, 2

CO:1 K:1 25. தமிழகத்தின் எவ்விடத்தில் பழங்கால ரோமானிய குடியரசு காசுகள் கிடைத்தன?

(அ) சென்னை (ஆ) கரூர்

(இ) மதுரை (ஈ) தஞ்சாவூர்

CO:1 K:1 26. தமிழக வரலாற்றில் ‘வர்ணா சிரம தர்மங்கள் அனுபாலித’ என்று தங்களை அழைத்துக் கொண்டவர்கள்?

(அ) பல்லவர்கள் (ஆ) பாண்டியர்கள்

(இ) நாயக்கர்கள் (ஈ) புதுக்கோட்டை தொண்டைமான்கள்

CO:1 K:1 27. ரோமானிய தொழிற்சாலையை மார்டிமர் வீலர் கண்டுபிடித்த இடம் எது?

(அ) ஆதிச்சநல்லூர் (ஆ) அரிக்கமேடு

(இ) களியூர் (ஈ) காஞ்சி

CO:1 K:1 28. ----- ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.

(அ) 27 கிகி (ஆ) 28 கிகி

(இ) 32 கிகி (ஈ) 72 கிகி

CO:1 29. தன்நாட்டைக் காத்துக் கொள்ளப் போரிடும் - புறத்திணை எது?

K:1 (அ) வெட்சி (ஆ) கரந்தை

(இ) வஞ்சி (ஈ) காஞ்சி

CO:1 K:1 30. --------- என்ற நூலை கங்காதேவி எழுதினார்

(அ) மனுசரித்ரம் (ஆ) அமுக்தமால்யதா

(இ) பாண்டுரங்க மகாத்மியம் (ஈ) மதுராவிஜயம்

CO:2 K:1 31. தமிழர்களின் இசைச் சிறப்பினை எடுத்துரைக்கும் காப்பியம் எது?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை

(இ) நீலகேசி (ஈ) குண்டலகேசி

CO:2 K:1 32. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் இந்த வரிகள் எந்த தமிழ் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன?

(அ) திருக்குறள் (ஆ) தொல்காப்பியம்

(இ) சிலப்பதிகாரம் (ஈ) மணிமேகலை

CO:2 K:1 33. தமிழகத்தில் பாண்டியர்களின் ஆட்சி குறித்த தகவல்களை எழுதியுள்ள ரோமானியர் யார்?

(அ) மெகஸ்தனிஸ் (ஆ) ஸ்டிராபோ

(இ) பிளினி (ஈ) அகஸ்டஸ்

CO:2 K:1 34. விருந்தோம்பல் என்பது பண்டைய தமிழர்களின் முக்கிய கடமையாக இருந்தது என்று ------------ கூறுகிறது

(அ) அகநானூறு (ஆ) ராமாயணம்

(இ) மஹாபாரதம் (ஈ) புறநானூறு

CO:2 K:1 35. மிகவும் புகழ்பெற்ற 'இந்திரவிழா' ------------ நகரத்தில் கொண்டாடப்பட்ட செய்தியைப் 'பட்டினப்பாலை' என்ற நூலில் 'உருத்திரங்கண்ணனார்' கூறியுள்ளார்

(அ) புகார் (ஆ) காஞ்சிபுரம்

(இ) மதுரை (ஈ) சேலம்

CO:2 K:1 36. தமிழக தொல்லியல் துறையின் முதல் இயக்குனர் யார்?

(அ) ராமசாமி (ஆ) குப்புசாமி

(இ) நாகசாமி (ஈ) கே.வி ராமன்

CO:2 K:1 37. விருந்தினரின் வருகையை அறிவிக்கும் காகத்தைப் புகழ்ந்து பாடிய புலவர், ------------ என்ற பெயரைப் பெற்றார்

(அ) அகத்தியர் (ஆ) காக்கைப் பாடினியார்

(இ) கபிலர் (ஈ) கம்பர்

CO:2 K:1 38. பாண்டியர்களின் நிர்வாக முறையைப் பற்றி ------------ தமது 'மதுரைக் காஞ்சி' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்

(அ) கரிகால் பெருவளத்தான் (ஆ) மாங்குடி மருதனார்

(இ) சிலப்பதிகார பாண்டிய நெடுஞ்செழியன் (ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

CO:2 K:1 39. -------- என்னும் போர்க்களத்தில், சேரர் மற்றும் பாண்டியர்களைக் கரிகாலன் தோற்கடித்தார்

(அ) வெண்ணி (ஆ) வாகைப்பரந்தலை

(இ) புதுக்கோட்டை (ஈ) (a) மற்றும் (b) இரண்டும்

CO:2 K:1 40. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறியவர் யார்?

(அ) ஔவையார் (ஆ) அதிவீரராம பாண்டியர்

(இ) உலகநாதர் (ஈ) பாரதியார்

CO:2 K:1 41. பின்வரும் சங்க இலக்கிய நூல்களில், சங்க காலத்து சேரர்களைப் பற்றி குறிப்பிடும் நூல் எது?

(அ) பரிபாடல் (ஆ) பதிற்றுப்பத்து

(இ) கலித்தொகை (ஈ) புறநானூறு

CO:2 K:1 42. சேக்கிழார் யாருடைய பாடல்களை "மூல இலக்கியம்" எனக் குறிப்பிடுகிறார்?

(அ) திருநாவுக்கரசர் (ஆ) திருஞானசம்பந்தர்

(இ) சுந்தரர் (ஈ) மாணிக்கவாசகர்

CO:2 K:1 43. "கதரின் வெற்றி" நாடகம் மூலம் தேசிய உணர்வைத் தூண்டியவர்

(அ) பம்மல் சம்பந்தம் (ஆ) சங்கரதாஸ் சுவாமிகள்

(இ) தெ.பொ.கிருஷ்ணசாமி (ஈ) தி.க.சண்முகம்

CO:2 K:1 44. நாட்டுப் பாடல் சாயலில் பக்திப் பாடல்கள் பாடிய ஆழ்வார் யார்?

(அ) ஆண்டாள் (ஆ) திருப்பாணாழ்வார்

(இ) திருமழிசையாழ்வார் (ஈ) திருமங்கையாழ்வார்

CO:2 K:1 45. "மாதானுபங்கி" – என்று அழைக்கப்படுபவர் யார்?

(அ) திருமூலர் (ஆ) திருநாவுக்கரசர்

(இ) திருஞானசம்பந்தர் (ஈ) திருவள்ளுவர்

CO:2 K:1 46. யார் ஒருவருடைய உயிரை எமன் கூட பறிக்கத் தயங்குவான் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(அ) கல்லாதவன் (ஆ) பொல்லாதவன்

(இ) கொல்லாதவன் (ஈ) வெல்லாதவன்

CO:2 K:1 47. அருள் என்னும் குழந்தைக்கு வள்ளுவர் எதனைச் செவிலித் தாயாக ஒப்பிடுகிறார்?

(அ) அடக்கம் (ஆ) பொறுமை

(இ) கண்ணியம் (ஈ) செல்வம்

CO:2 K:1 48. பசியென்னும் கொடிய நோய் யாரை அணுகுவதில்லை என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(அ) தவமுடையோரை (ஆ) அருளுடையோரை

(இ) புகழுடையோரை (ஈ) பகிர்ந்து உண்ணுவோரை

CO:2 K:1 49. உலகத்தோடு ஒட்டி ஒழுகாதவர் பல நூல்களைக் கற்றிருந்தாலும் எதனைப் போல கருதப்படுவார் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

(அ) கல்லாதவர் (ஆ) அறிவில்லாதவர்

(இ) குருடர் (ஈ) இறந்தவருக்குச் சமமானவர்

CO:2 K:1 50. யாழை விட இனிமையானது என்று வள்ளுவர் எதனை ஒப்பிடுகிறார்?

(அ) மழலைச் சொல் (ஆ) கிளியின் சொல்

(இ) காதலி சொல் (ஈ) கவிஞர் சொல்

CO:2 K:1 51. 'நாமம் கெடக் கெடுநோய்' என்று வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

(அ) காமம், வெகுளி, மயக்கம் (ஆ) அறிவு, அன்பு, பாசம்

(இ) அச்சம், நாணம், மடம் (ஈ) உவகை, வெகுளி, அழுகை

CO:2 K:1 52. குடும்பம் எனும் சொல் முதன் முதலில் இடம் பெற்ற நூல்?

(அ) நாலடியார் (ஆ) இனியவை நாற்பது

(இ) திருக்குறள் (ஈ) முதுமொழிக்காஞ்சி

CO:2 K:1 53. மன்னவனது படைவலிமைய அழிக்கும் ஆயுதம் எதுவெனத் திருக்குறள் கூறுகிறது?

(அ) கடுஞ்சொல்லும் தண்டனையும் (ஆ) கடுஞ்சொல்லும் கொடுங்கோலாட்சியும்

(இ) சினமும் திறைப்பொருளும் (ஈ) மேற்காணும் எவையும் அல்ல

CO:2 K:1 54. -------- காலம் கருதி வெறுப்பில்
வேண்டுப வேட்பச் சொலல்"

(அ) குறிப்பறிந்து (ஆ) இடனறிந்து

(இ) பொருளறிந்து (ஈ) வினையறிந்து

CO:2 K:1 55. சான்றோர் பழிக்கும் வினையை எந்நிலையிலும் செய்தல் கூடாது என்பதில் வள்ளுவர் எந்நிலையை குறிப்பிடுகிறார்?

(அ) நோயால் வாடும் காலத்தில் (ஆ) கல்வி கற்க இயலாத நிலையில்

(இ) பொருள் ஈட்ட முடியாத நிலையில் (ஈ) தாய் பசியால் வாடும் காலத்தில்

CO:2 56. அனைத்து அழிவிலிருந்தும் காக்கும் கருவி எதுவெனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

K:1 (அ) கல்வி (ஆ) அறிவு
(இ) பொன் (ஈ) செல்வம்

CO:2 K:1 57. திருக்குறளில் "ஒப்புரவு" - என்பதன் பொருள் யாது?
(அ) தூய்மை (ஆ) உவமை
(இ) வாய்மை (ஈ) உதவி

CO:2 K:1 58. அறம் என்னும் சொல்லிற்குத் தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழங்கி வருகின்றன என்று கூறியவர்
(அ) திருக்குறள் முனுசாமி (ஆ) மூ.வரதராசனார்
(இ) க.த.திருநாவுக்கரசு (ஈ) கவிஞர் வைரமுத்து

CO:2 K:1 59. 'எதனைப் போன்று ஐம்புலன்களை அடக்க வேண்டும்' என்கிறார் திருமூலர்?
(அ) சிங்கம் (ஆ) யானை
(இ) ஆமை (ஈ) மண்புழு

CO:2 K:1 60. "திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும் பொருளும் அதனினூஉங்கு இல்"
(அ) பண்புடைமை (ஆ) வினை செயல் வகை
(இ) சொல்வன்மை (ஈ) வினைத் தூய்மை

CO:3 K:1 61. ஒரு நல்ல நாட்டிற்கு அழகு எதுவெனத் திருவள்ளுவர் கூறுகிறார்?
(அ) மலையும், அருவியும் (ஆ) நடுநிலையாளரும், வணிகரும்
(இ) செல்வமும், விளைச்சலும் (ஈ) பகையின்மையும் பிணியின்மையும்

CO:3 K:1 62. "எல்லாப் பொருளும் இதன்பாலுல; இதன்பால் இல்லாத எப்பாருளும் இல்லையால்" என்று திருக்குறளைச் சிறப்பிப்பவர் யார்?
(அ) ஔவையார் (ஆ) எறிச்சலூர் மலாடனார்
(இ) மதுரைத் தமிழ்நாகனார் (ஈ) மாங்குடி மருதனார்

CO:3 K:1 63. மன்னனை, 'இறை' என்று குறிக்கும் வார்த்தையைப் பயன்படுத்தியவர் யார்?
(அ) திருவள்ளுவர் (ஆ) கம்பர்
(இ) இளங்கோவடிகள் (ஈ) சீத்தலைச்சாத்தனார்

CO:3 K:1 64. சேரும் போது மகிழ்வதும் பிரியும் போது மனம் கலங்குவதும் யாருடைய தொழிலாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
(அ) புலவர் தொழில் (ஆ) உழவர் தொழில்
(இ) மருத்தவர் தொழில் (ஈ) வணிகர் தொழில்

CO:3 K:1 65. காலத்தினால் செய்த நன்றியை வள்ளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?

(அ) அறிவைவிடப் பெரியது (ஆ) கடலைவிடப் பெரியது

(இ) உலகத்தைவிடப் பெரியது (ஈ) வானைவிடப் பெரியது

CO:3 K:1 66. கொக்கொக்க கூம்பு பருவத்து" .... என்ற குறளில் எதைப் போன்று காரியத்தை முடிக்க வேண்டுமென்று கூறுகிறார்?

(அ) கொக்கு (ஆ) ஆமை

(இ) முயல் (ஈ) எறும்பு

CO:3 K:1 67. கீழ்க்காணும் பொருளை உடைய திருக்குறளை தேர்க.

"உண்மையான துறவிகள் வேடம் போட வேண்டிய தேவையில்லை. உலகம் பழிக்கின்ற தவறான செயல்களை ஒழித்துவிடுவது ஒன்றே துறவிகளுக்கு வேண்டுவது"

(அ) வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம் (ஆ) புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி

(இ) மனத்தது மாசாக மாண்டார் நீராடி (ஈ) மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்

CO:3 K:1 68. திருக்குறள் நம் இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்று, வாழ்க்கை நெறிமுறைகள், சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் கல்வி போன்ற அனைத்து வினாக்களும் விடை அளிக்கிறது. மிகவும் பிரபலமான திருக்குறள் பல மொழிகளில் உலகளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றில் எது சிறப்பாக பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது

(அ) அனைத்து வினாக்களுக்குமான பதில்களின் தொகுப்பாகத் திருக்குறள் உள்ளது (ஆ) திருக்குறள் ஒரு சமயநூல்

(இ) திருக்குறள் ஓர் உரைநடை (ஈ) திருக்குறள் ஓர் அறிவுசார்ந்த தொகுப்பு

CO:3 K:1 69. தமிழில் சிறந்த நீதி நூலாக கருதப்படுவது எது?

(அ) நீதி நெறி விளக்கம் (ஆ) திருக்குறள்

(இ) நாலடியார் (ஈ) ஆத்தி சூடி

CO:3 K:1 70. "இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா உகையும் ஏதம் இறைக்கு"

இக்குறளில் குறிப்பிடும் இறை என்பதன் பொருள்

(அ) இறைவன் (ஆ) அரசன்

(இ) உயர்ந்தவன் (ஈ) மேன்மக்கள்

CO:3 71. கவறும் கழகமும் கையும் தருக்கி

K:1 இவறியார் இல்லாகி யார்" – இக்குறள் யாருக்கு அறிவுரை கூறுகிறது?

(அ) காவலர்கள் (ஆ) தூதுவர்கள்

(இ) அமைச்சர்கள் (ஈ) வேந்தர்கள்

CO:3 K:1 72. கூற்று (A): திருக்குறள் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

காரணம் (R): மனிதர்கள் திருக்குறளின் மூலப்பொருளான அகிம்சை, மதச்சார்பின்மை, சகோதரத்துவம் ஆகியவற்றை பின்பற்றுகின்றனர்.

(அ) (A) சரி ஆனால் (R) தவறு (ஆ) (A) தவறு ஆனால் (R) சரி

(இ) (A) மற்றும் (R) இரண்டும் தவறு (ஈ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R), (A) விற்கான சரியான விளக்கமாகும்

CO:3 K:1 73. ------------ இரண்டும் கண்ணெண்ப வாழும் உயிர்க்கு".
மேற்காணும் திருக்குறளில் இந்த இரண்டை திருவள்ளுவர் கண்களுக்கு ஒப்பாகக் கூறுகிறார்

(அ) அறமும் பொருளும் (ஆ) நடுவுநிலைமையும் அடக்கமுடைமையும்

(இ) பொருளும் இன்பமும் (ஈ) எண்ணும் எழுத்தும்

CO:3 K:1 74. அறம் பெருகும் வழி' எனத் திருவள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?

(அ) கோபச் சொற்களைக் கூறுதல் (ஆ) புகழ்ச் சொற்களைக் கூறுதல்

(இ) இனிய சொற்களைக் கூறுதல் (ஈ) பழியுடை சொற்களைக் கூறுதல்

CO:3 K:1 75. ஒருவரின் நகைக்கும் உவகைக்கும் பகையாக இருப்பது எது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(அ) அச்சம் (ஆ) அழுக்காறு

(இ) அழுகை (ஈ) சினம்

CO:3 K:1 76. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல – இவ்வுவமை உணர்த்தும் பொருள்

(அ) பொறையுடைமை (ஆ) ஒழுக்கமுடைமை

(இ) நட்புடைமை (ஈ) அறிவுடைமை

CO:3 K:1 77. ஆங்கிலேயர்களுடன் சண்டையிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்

(அ) கயத்தாறு (ஆ) நாகலாபுரம்

(இ) புதுக்கோட்டை (ஈ) பாஞ்சாலங்குறிச்சி

CO:3 K:1 78. மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட இடம்

(அ) விருபாட்சி (ஆ) காளையார் கோவில்

(இ) திருப்பத்தூர் (ஈ) கயத்தாறு

CO:3 K:1 79. சிவகங்கை இராணி வேலுநாச்சியாரின் 'உடையாள் படைக்கு' தலைமையேற்றவரின் பெயரை குறிப்பிடுக.

(அ) வெள்ளச்சி (ஆ) லட்சுமி

(இ) குயிலி (ஈ) முத்தாத்தாள்

CO:3 K:1 80. பூலித்தேவரின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத கோட்டை ----------- ஆகும்.

(அ) நெற்கட்டும்செவல் (ஆ) வாசுதேவநல்லூர்

(இ) பனையூர் (ஈ) சிவகிரி

CO:3 K:1 81. கூற்று (A) : வேலுநாச்சியார் ஹைதர் அலியிடம் 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப் படைகளும் அனுப்பும் படி கடிதம் எழுதினார்.

காரணம் (R) : வேலுநாச்சியார் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுப்படுத்தினார்.

(அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி எனினும் காரணம் (R) கூற்றை (A) சரியாக விளக்கவில்லை

(ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகிய இரண்டும் தவறானவை

(இ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி காரணம் (R) கூற்றை (A) சரியாகவே விளக்குகிறது

(ஈ) கூற்று (A) தவறானது, காரணம் (R) சரியானது

CO:3 K:1 82. ஆங்கிலேயர்களுக்கு எதிராக "தென்னிந்திய கூட்டமைப்பு" ஏற்படுத்தியவர்

(அ) மருது பாண்டியன் (ஆ) சிவசுப்ரமணியன்

(இ) கட்டபொம்மன் (ஈ) ஊமைத்துரை

CO:3 K:1 83. வேலூர் கலகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இராணுவ தளபதி யார்?

(அ) ஜார்ஜ் கார்மிசெல் ஸ்மித் (ஆ) ரோலோ கில்லஸ்பி

(இ) ஜான் நிக்கல்சன் (ஈ) வில்லியம் ஹாட்சன்

CO:3 K:1 84. சரியான இணைகளைத் தேர்வு செய்க.

1) ஒண்டிவீரன் - மருது சகோதரர்கள்

2) கோபால நாயக்கர் - திண்டுக்கல் கூட்டமைப்பு

3) குயிலி - புலித்தேவர்

4) முத்துவடுகநாதர் - காளையார் கோவில் போர்

(அ) 1 மற்றும் 3 சரி (ஆ) 1 மற்றும் 2 சரி

(இ) 2 மற்றும் 3 சரி (ஈ) 2 மற்றும் 4 சரி

CO:3 K:1 85. கீழ்க்கண்டவற்றில் வேலு நாச்சியார் பற்றி தவறான கூற்று எது?

அ) இவர் ராமநாதபுரம் இளவரசி ஆவார்

ஆ) இவருடைய கணவர் முத்து வடுக உடைய தேவர்

இ) 1780 ஹைதர் அலி சிவகங்கையின் மீது படை எடுத்து வேலுநாச்சியாரை தோற்கடித்தார்

ஈ) இவர் இரண்டாம் மைசூர் போரை பயன்படுத்தி சிவகங்கைக்குள் நுழைந்தார்

CO:3 K:1 86. கூற்று (A) : தென்னிந்திய புரட்சி மிக பயங்கரமாக தோல்வியுற்றது

காரணம் (R) : தலைவர்களிடையே ஒற்றுமை இல்லாமல் இருந்தது

(அ) (A) சரி (R) தவறு (ஆ) (A) சரி (R), (A)-யின் சரியான விளக்கமல்ல

(இ) (A), (R) இரண்டும் தவறு (ஈ) (A) சரி (R), (A)-யின் சரியான விளக்கம்

CO:3 K:1 87. வேலூர் கலகத்திற்கு உடனடி காரணம் எது?

(அ) பெரிய பாளையம் தலைவர்களின் மரணம் (ஆ) அக்னி தொப்பி அறிமுகம்

(இ) அதிக எண்ணிக்கையிலான இந்திய சிப்பாய்களின் ஆட்சேர்ப்பு (ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

CO:3 K:1 88. எந்த ஆண்டு, திருச்சிராப்பள்ளி பிரகடனம் மருது பாண்டியர்களால் வெளியிடப்பட்டது?

(அ) 1801 (ஆ) 1802

(இ) 1803 (ஈ) 1804

CO:3 K:1 89. தீரன் சின்னமலை எந்த கோட்டையின் உச்சியில் தூக்கிலிடப்பட்டார்?

(அ) வேலூர் கோட்டை (ஆ) சங்ககிரி கோட்டை

(இ) ஓடாநிலை கோட்டை (ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

CO:3 K:1 90. தீரன் சின்னமலை எந்தப் பகுதியைச் சேர்ந்த பாளையக்காரர்?

(அ) பாஞ்சாலங்குறிச்சி (ஆ) நெற்கட்டும்செவல்

(இ) கொங்கு (ஈ) ராமநாதபுரம்

CO:4 K:1 91. வேலூர் கலகத்தின் போது மெட்ராஸ் பிரசிடென்சியின் கவர்னராக இருந்தவர் யார்?

(அ) பிரான்சிஸ் தினம் (ஆ) ஜான் கிராடாக்

(இ) மிண்டோ பிரபு (ஈ) வில்லியம் பென்டிங்க் பிரபு

CO:4 K:1 92. வேலுநாச்சியார் எந்த ஆண்டு பிறந்தார்?

(அ) 1730 (ஆ) 1735

(இ) 1740 (ஈ) 1745

CO:4 K:1 93. வேலுநாச்சியாரின் உண்மையுள்ள நண்பர் யார்?

(அ) ரமணி (ஆ) குயிலி

(இ) தேன்குழலி (ஈ) அன்னபூரணி

CO:4 K:1 94. சிவகங்கையின் சிங்கம் என்று அழைக்கப்பட்டவர் யார்?

(அ) பெரிய மருது (ஆ) சின்ன மருது

(இ) வீரபாண்டிய கட்டபொம்மன் (ஈ) பூலி தேவர்

CO:4 K:1 95. தென்னிந்தியாவின் ஜான்சி ராணி என்று அழைக்கப்பட்டவர் யார்?

(அ) குயிலி (ஆ) வேலுநாச்சியார்

(இ) முத்துலட்சுமி (ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

CO:4 K:1 96. யார் தன்மேல் எண்ணெய்யை ஊற்றிக் கொண்டு, தீயிட்டுக் கொண்டு, களஞ்சியசாலைக்குள் சென்றது?

(அ) குயிலி (ஆ) தேன்குழலி

(இ) அன்னபூரணி (ஈ) முத்துலட்சுமி

CO:4 K:1 97. மணியாச்சியில் வாஞ்சிநாதன், மாவட்ட ஆட்சியர் ஆஷை சுட்டுக் கொன்ற போது, இங்கிலாந்து மன்னராக இருந்தவர் யார்?

(அ) நான்காம் ஜார்ஜ் (ஆ) மூன்றாம் ஜார்ஜ்

(இ) ஐந்தாம் ஜார்ஜ் (ஈ) ஆறாம் ஜார்ஜ்

CO:4 K:1 98. மூக்கறுப்பு போர் யாருடைய ஆட்சி காலத்தில் நடைபெற்றது?

(அ) சேவப்ப நாயக்கர் (ஆ) திருமலை நாயக்கர்

(இ) சொக்கநாத நாயக்கர் (ஈ) ராணிமங்கம்மாள்

CO:4 K:1 99. பலமுள்ள காங்கிரஸ்வாதிகளில் 1937 முதல் 1939ம் ஆண்டு வரை மெட்ராஸின் முதல் அமைச்சரவையின் முதலமைச்சர்

(அ) சி. ராஜாஜி (ஆ) எஸ். சீனிவாசா

(இ) பி. சுப்பராயன் (ஈ) பி.எஸ். குமாரசாமி ராஜா

CO:4 K:1 100. சென்னைவாசிகள் சங்கம் எந்த ஆண்டு நிறுத்தப்பட்டது?

(அ) 1881 (ஆ) 1862

(இ) 1872 (ஈ) 1888

CO:4 101. மெட்ராஸ் நேட்டிவ் சங்கத்தை தொடங்கியவர் யார்?

K:1 (அ) லட்சுமிநரசு (ஆ) ஸ்ரீனிவாசனார்

(இ) (a) மற்றும் (b) இரண்டும் (ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

CO:4 K:1 102. மெட்ராஸ் மகாஜன சபையில் அதன் செயலாளராக செயலில் பங்கு வகித்தவர் யார்?

(அ) ஸ்ரீனிவாசனார் (ஆ) ஆனந்தசார்லு

(இ) ஜி.சுப்ரமணியம் (ஈ) லட்சுமிநரசு

CO:4 K:1 103. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் தீர்மானம் எந்த தேதியில் நிறைவேற்றப்பட்டது?

(அ) ஏப்ரல் 7, 1920 (ஆ) பிப்ரவரி 18, 1929

(இ) ஆகஸ்ட் 8, 1942 (ஈ) ஏப்ரல் 27, 1920

CO:4 K:1 104. தி இந்து நாளிதழ் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

(அ) 1888 (ஆ) 1879

(இ) 1878 (ஈ) 1877

CO:4 K:1 105. மகளிர் இந்திய சங்கம் யாரால் தொடங்கப்பட்டது?

(அ) அன்னி பெசன்ட் (ஆ) லட்சுமிபாய்

(இ) இலட்சுமி சாகல் (ஈ) உஷா மேத்தா

CO:4 K:1 106. பாரத மாதா சங்கம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

(அ) 1908 (ஆ) 1909

(இ) 1910 (ஈ) 1911

CO:4 K:1 107. தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்திய முதல் முதல்வர் யார்?

(அ) காமராஜர் (ஆ) வ.உ.சி.

(இ) எம்.ஜி.ஆர். (ஈ) ராஜகோபாலாச்சாரி

CO:4 K:1 108. பாரதியார் தபால் தலை எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?

(அ) 1970 (ஆ) 1971

(இ) 1972 (ஈ) 1973

CO:4 K:1 109. பாப்பாரப்பட்டியில் பாரதிய ஆசிரமத்தை நிறுவியவர் யார்?

(அ) வி.டி சாவர்க்கர் (ஆ) சி.ஆர் தாஸ்.

(இ) சுப்ரமணிய சிவா (ஈ) தாதாபாய் நௌரோஜி

CO:4 K:1 110. இன்று பரவலாக அனைவராலும் பயன்படுத்தப்படும் 'ஜெய் ஹிந்த்' என்ற வாசகத்தைச் உருவாக்யவர்?

(அ) திருப்பூர் குமரன். (ஆ) செண்பகராமன்

(இ) சுப்பிரமணிய பாரதி (ஈ) வ. உ. சிதம்பரனார்

CO:4 K:1 111. எந்த ஆண்டு ஆங்கிலேயர்கள் பாரதியின் படைப்புகளுக்கு தடை விதித்தனர்?

(அ) 1919. (ஆ) 1929

(இ) 1909 (ஈ) 1927

CO:4 K:1 112. சமத்துவ தினமாக யாருடைய பிறந்த நாள் நினைவுகூரப்படுகிறது?

(அ) மகாத்மா காந்தி. (ஆ) மோதிலால் நேரு

(இ) அம்பேத்கர். (ஈ) சுபாஷ் சந்திர போஸ்

CO:4 K:1 113. பாரத மாதா சங்கத்தை தொடங்கியவர் யார்?

(அ) சி.ஆர் தாஸ். (ஆ) தாதாபாய் நௌரோஜி

(இ) நீலகண்ட பிரம்மச்சாரி (ஈ) வி.டி சாவர்க்கர்

CO:4 K:1 114. மகளிர் இல்லம் புத்தகத்தை எழுதியவர் யார்?

(அ) அம்புஜாத்தம்மாள் (ஆ) கிருஷ்ணவேணி அம்மையார்

(இ) அஞ்சலை அம்மாள் (ஈ) அசலாம்பிகை அம்மையார்

CO:4 K:1 115. மகளிர் பாலின சங்கம் யாரால் தொடங்கப்பட்டது?

(அ) மூவலூர் ராமாமிர்தம் (ஆ) நீலாம்பிகை

(இ) கிருஷ்ணவேணி அம்மையார் (ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

CO:4 K:1 116. சரியாகப் பொருத்தப்பட்ட ஜோடிகளைத் தேர்ந்தெடுக்கவும்.

1) நிழல் தாங்கல்கள் - வைகுண்ட சுவாமிகள்

2) இந்து முற்போக்கு முன்னேற்ற சங்கம் - ராஜாராம் மோகன் ராய்

3) சமரச சன்மார்க்க சங்கம் - வள்ளலார்

4) சுயமரியாதை அறம் - வேதநாயகம் பிள்ளை

(அ) 1 மற்றும் 3. (ஆ) 1 மற்றும் 2

(இ) 1 மட்டும். (ஈ) 1, 2 மற்றும் 4

CO:4 K:1 117. வள்ளலாரின் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" எப்போது நிறுவப்பட்டது?

(அ) 1865 (ஆ) 1867

(இ) 1866 (ஈ) 1868

CO:4 K:1 118. மதராஸ் மாநிலம், தமிழ்நாடு என்று பெயர் மாற்ற வேண்டி விருதுநகர் சங்கரலிங்கனார் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த ஆண்டு

(அ) 1956 ஜூலை (ஆ) 1956 அக்டோபர்

(இ) 1965 ஜூலை (ஈ) 1965 அக்டோபர்

CO:4 119. அயோத்திதாசரால் தோற்றுவிக்கப்பட்டது எது ?

K:1 (அ) சத்யசோதக் சமாஜ் (ஆ) சமரச வேத சன்மார்க்க சங்கம்
(இ) அத்வைதானந்த சபா (ஈ) அய்யாவழி

CO:4 K:1 120. "1800 வருடங்களுக்கு முந்தைய தமிழர்கள்" என்ற நூலின் ஆசிரியர் யார் ?
(அ) பாவாணர் (ஆ) வி.கனகசபை
(இ) இராசநாயகம் (ஈ) எஸ்.ஜே.குணசேகரம்

CO:5 K:1 121. 1882 ஆம் ஆண்டில், ஜான் ரத்தினம் மற்றும் அயோத்தி தாசர் ------------ என்ற இயக்கத்தை நிறுவினர்
(அ) திராவிட பாண்டியன் (ஆ) திராவிட கழகம்
(இ) திராவிட முன்னேற்றக் கழகம் (ஈ) இவற்றில் ஏதுமில்லை

CO:5 K:1 122. தமிழ் செம்மொழி என்று முதன்முதலில் வாதிட்டு, மதராஸ் பல்கலைக்கழகம் தமிழை வடமொழி என்று அழைக்கக் கூடாது என்று முதன்முதலில் வாதிட்டவர் யார்?
(அ) சுப்பிரமணிய பாரதி (ஆ) பரிதிமாற் கலைஞர்
(இ) செண்பகராமன் (ஈ) மறைமலை அடிகள்

CO:5 K:1 123. சித்தாந்த தீபிகா என்ற பத்திரிகையில் பணியாற்றியவர் யார்?
(அ) சுப்பிரமணிய பாரதி (ஆ) பரிதிமாற் கலைஞர்
(இ) மறைமலை அடிகள் (ஈ) தந்தை பெரியார்

CO:5 K:1 124. தாத்தா என்று அழைக்கப்படுபவர் யார்?
(அ) இரட்டைமலை சீனிவாசன் (ஆ) சுப்பிரமணிய பாரதி
(இ) எம்.சி ராஜா (ஈ) M.G. ரானடே

CO:5 K:1 125. தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் சட்ட மன்ற உறுப்பினர் யார்?
(அ) இரட்டைமலை சீனிவாசன் (ஆ) எம்.சி ராஜா
(இ) M.G. ரானடே (ஈ) சுப்பிரமணிய பாரதி

CO:5 K:1 126. புதிய வேளாண்மைக் கொள்கை அறிவிக்கப்பட்ட ஆண்டு
(அ) 1989 (ஆ) 1999
(இ) 1992 (ஈ) 2000

CO:5 K:1 127. இந்திய உணவுக் கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு
(அ) 1962 (ஆ) 1963
(இ) 1964 (ஈ) 1965

CO:5 128. இந்தியாவில் பசுமைப் புரட்சியை அறிமுகம் செய்தவர்கள் யார்?

K:1

(அ) M.S. சுவாமிநாதன் மற்றும் R.வெங்கட்ராமன்
(ஆ) A.M.குஷ்ரோ மற்றும் M.S.சுவாமிநாதன்
(இ) A.M.குஷ்ரோ மற்றும் P.சிதம்பரம்
(ஈ) M.S.சுவாமிநாதன் மற்றும் C.சுப்பிரமணியன்

CO:5 K:1
129. சுதந்திர இந்தியாவில் நிலச்சீர்த்திருத்த நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக இடைத்தரகர்களை ஒழிப்பதற்கான சட்டம் முதன் முதலில் எங்கு ஆலோசிக்கப்பட்டது?

(அ) அஸ்ஸாம்
(ஆ) வங்காளம்
(இ) குஜராத்
(ஈ) சென்னை

CO:5 K:1
130. வேளாண்மை விலை கொள்கையின் முக்கிய கருவியாக இருப்பது எது?

(அ) பொருள்களை தேர்ந்தெடுத்தல்
(ஆ) உச்சபட்ச கொள்முதல் விலை
(இ) குறைந்த பட்ச ஆதரவு விலை
(ஈ) குறைந்த பட்ச சில்லறை விலை

CO:5 K:1
131. வெண்மைப் புரட்சியின் தந்தை எனக் கருதப்படுபவர்

(அ) M.S.சுவாமிநாதன்
(ஆ) A.M.சக்கரபர்த்தி
(இ) V.குரியன்
(ஈ) ஐயன் வில்மட்

CO:5 K:1
132. மகல்வாரி முறை இந்தியாவில் முதன் முறையாக எங்கு தொடங்கப்பட்டது?

(அ) ஆக்ரா மற்றும் அவுத்
(ஆ) தஞ்சாவூர் மற்றும் திருச்சி
(இ) விஜயவாடா மற்றும் கர்நூல்
(ஈ) ஜலந்தர் மற்றும் டெல்லி

CO:5 K:1
133. தமிழ்நாட்டில் உழவர் சந்தையை அறிமுகப்படுத்தியவர்?

(அ) எம்.ஜி.ராமச்சந்திரன்
(ஆ) ஜானகி ராமச்சந்திரன்
(இ) கருணாநிதி
(ஈ) ஜெயலலிதா

CO:5 K:1
134. ஜமீன்தாரி முறை இந்தியாவில் யாரால் தொடங்கப்பட்டது?

(அ) தாமஸ் மன்றோ
(ஆ) காரன்வாலிஸ் பிரபு
(இ) வெங்கட சுப்பையா
(ஈ) மிர்டல்

CO:5 K:1
135. பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு

(அ) 27%
(ஆ) 57%
(இ) 28%
(ஈ) 49%

CO:5 K:1
136. தமிழகத்தில் வட கிழக்குப் பருவ மழை பொழியும் மாதங்கள்

(அ) ஆகஸ்டு – அக்டோபர்
(ஆ) செப்டம்பர் - நவம்பர்
(இ) அக்டோபர் - டிசம்பர்
(ஈ) நவம்பர் - ஜனவரி

CO:5 K:1 137. தமிழக மக்களில் பெரும்பான்மையினர் ------------ தொழிலையே சார்ந்திருக்கின்றனர்.

(அ) தொழில் துறை (ஆ) விவசாயம்

(இ) சேவைத்துறை (ஈ) தொழில் முனைவோர்

CO:5 K:1 138. தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது ------------ பருவ மழையாகும்.

(அ) வடகிழக்கு (ஆ) வடமேற்கு

(இ) தென் கிழக்கு (ஈ) தென் மேற்கு

CO:5 K:1 139. உழவர் கடன் அட்டையைப் பயன்படுத்தி விவசாயிகள் ------------ கடன் பெற முடியாது.

(அ) கூட்டறவு வங்கிகளின் (ஆ) பிராந்திய கிராமப்புற வங்கிகளின்

(இ) பொதுத்துறை வங்கிகளின் (ஈ) தனியார் வங்கிகளின்

CO:5 K:1 140. கீழ்க்கண்டவற்றில் எது தமிழ்நாட்டில் பயிர் நில அளவைப் பாதிக்காத காரணி?

(அ) மழைப்பொழிவு (ஆ) நகரமயமாக்கல்

(இ) மண் வளம் (ஈ) அரசு மானியங்கள்

CO:5 K:1 141. நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவைக் கண்காணிக்கும் அரசு நிறுவனம் எது?

(அ) சுகாதாரத் துறை (ஆ) தேசிய வானிலை சேவை

(இ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் (ஈ) வேளாண்மைத் துறை

CO:5 K:1 142. பயிர் சாகுபடியை எந்த காரணிகள் முதன்மையாக பாதிக்கின்றன?

(அ) மண் வளம் மற்றும் பயிர் சுழற்சி (ஆ) உழைப்பு மற்றும் இயந்திரங்கள் கிடைப்பது

(இ) மழைப்பொழிவு, நீர் இருப்பு, வானிலை மற்றும் சந்தை விலை (ஈ) மேலே உள்ள அனைத்தும்

CO:5 K:1 143. தென்மேற்கு பருவமழையின் போது தமிழகத்திற்கு முதன்மையான நீர் ஆதாரம் எது?

(அ) தமிழகம் வற்றாத ஆறுகளில் இருந்து தண்ணீர் பெறுகிறது (ஆ) கால்வாய்கள் மற்றும் ஏரிகளில் இருந்து தண்ணீர் பெறப்படுகிறது

(இ) வற்றாத ஆறுகள் (ஈ) கர்நாடகாவில் உள்ள அணைகள் நிரம்பி, தமிழகத்திற்கு தண்ணீர் தருகிறது

CO:5 K:1 144. அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைக்க பின்வரும் தொழில்நுட்பங்களில் எது பயன்படுத்தப்படுகிறது?

(அ) ஜி.பி.எஸ் (ஆ) குளிரூட்டல்

(இ) பயிர் சுழற்சி (ஈ) இயற்கை விவசாயம்

CO:5 K:1 145. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உருவாக்கப்பட்ட ஆண்டு

(அ) 1978 (ஆ) 1980

(இ) 1982 (ஈ) 1984

CO:5 K:1 146. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு

(அ) 1965 (ஆ) 1968

(இ) 1975 (ஈ) 1983

CO:5 K:1 147. முதல் தொழிற் கொள்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

(அ) 1945 (ஆ) 1947

(இ) 1948 (ஈ) 1950

CO:5 K:1 148. பொருத்துக: [புரட்சி – உற்பத்தி]

A) கருப்பு புரட்சி – 1) இறால்கள், வெங்காயம்

B) சாம்பல் புரட்சி – 2) பருத்தி

C) பிங்க் புரட்சி – 3) பெட்ரோலிய உற்பத்தி

D) வெள்ளி நார் புரட்சி – 4) உரங்கள்

(அ) 1, 2, 3, 4 (ஆ) 4, 2, 1, 3

(இ) 3, 4, 1, 2 (ஈ) 3, 4, 2, 1

CO:5 K:1 149. கீழ்க்காணும் எந்த திட்டம் ஒவ்வாரு குடும்பமும் ஒரு வங்கி கணக்கு வைத்து இருக்க வேண்டும் என உறுதிப்படுத்துகிறது?

(அ) பிரதான் மந்திரி ஜன் தன் திட்டம் (ஆ) சான்சட் ஆதர்ஷ் கிராமிய திட்டம்

(இ) ஸ்வச் பாரத் மிஷன் அபியான் திட்டம் (ஈ) ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்

CO:5 K:1 150. பொதுத்துறை ------------ உடையது.

(அ) இலாப நோக்கம் (ஆ) சேவை நோக்கம்

(இ) ஊகக வணிக நோக்கம் (ஈ) இவற்றில் எதுவுமில்லை